குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.152/2020

அ.சா.3

2025–ம் ஆண்டு ஜுலை 14–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேகர் | தொழில் | |
| தந்தை பெயர் | பெருமாள் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.02 மணி,

Accused Muthumanikkam present. Advocate Mr.K.P.Suresh present for accused. APP Mr.P.Suresh present.

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. சம்பவம் நடந்து 1 – 2 நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள். சம்பவ இடத்திற்கும், எனது கடைக்கும் இடையே சுமார் 30 அடி தூரம் இருக்கும். எனது கடைக்கு எதிர்திசையில் விபத்து நடந்தது என்றால் சரி. சம்பவத்தின்போது, சம்பவ இடத்தில் சாலைப்பணி நடந்து கொண்டிருந்தது என்றால், சம்பவ இடத்தில் நடைபெறவில்லை. கோட்டை மாரியம்மன் கோயில் அருகே ரயில்வே கேட் பாலம் அமைக்கும் பணி நடந்து கொண்டிருந்தது.

2. சம்பவம் நடந்த இடம் வளைவான பகுதி என்றால், சரி. சம்பவ இடத்தில் வேகத்தடை இருந்தது என்றால் சரி. அங்கு பொதுவாக அனைத்து வாகனங்கள் மெதுவாக தான் செல்லும் என்றால் சரி. விபத்து எவ்வாறு நடந்தது என்றாலும் விபத்திற்கான காரணம் எனக்கு தெரியாது என்றாலும் சரி.

3. பார்வை மகஜரில் என்ன வரையப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. நான் சலூன் கடை வைத்துள்ளதால், போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால், போலிசார் விசாரித்து தான் கையெழுத்து வாங்கினார்கள்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.07.14 17:41:35 +0530

போலிசார் தயாரித்து வைத்திருந்த மாதிரி வரைபடத்தில் நான் கையெழுத்திட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

4. நான் போலிசாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு விபத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 03.08 மணி.**

S
SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.07.14 17:41:41 +0530